LIBRARY
23 AUG 2013
EASTERN UNIVERSITY, SRI LANKA

# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

கலை கலாசார பீடம்

நான்காம் வருட முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு

பகுதி III 2010/2011 (January 2013)

## GEOS 4103 Geography of Sri Lanka

நேரம்: 3 மணித்தியாலங்கள்

ஒவ்வொரு பகுதியிலிருந்தும் இவ்விரு வினாக்களைத் தெரிவுசெய்து எல்லாமாக நான்கு வினாக்களுக்கு விடைதருக

---

### பகுதி – I

1. அ) இலங்கையின் கல்லியலமைப்பினை புவிச்சரிதகால அடிப்படையில் பாகுபடுத்துக.

(8 புள்ளிகள்)

ஆ) "இலங்கைப் புவிவெளியுருவவியற் தோற்றப்பாடுகள் பற்றிய வரலாற்று ரீதியான அணுகுமுறைகள் காலம் காலமாக புவியியலாளரினால் முன்வைக்கப்பட்ட எண்ணக்கருக்களுடன் இணைந்ததாக அமையப்பெற்றுள்ளன" இக்கூற்றினை விளக்கப் படங்களின் துணையுடன் விளக்குக.

(17 புள்ளிகள்)

2. இலங்கையின் பிரதான பாறை வகைகளின் பரம்பல்களை விளக்குவதுடன், பொருத்தமான உதாரணங்களுடன் அவற்றின் பொருளாதார முக்கியத்துவத்தினையும் விபரிக்குக.

(25 புள்ளிகள்)

3. அ) "அயன வலய அமைவிடத்தைக்கொண்ட இலங்கையின் காலநிலையானது சிக்கலானதன்மைகளைக் கொண்டிருப்பதற்கு பல பௌதிக, வளிமண்டலவியற் காரணிகளே காரணங்களாகும்" இக் கூற்றினை விளக்குக.

(12 புள்ளிகள்)

ஆ) "இலங்கையின் வெப்பநிலை, மழைவீழ்ச்சி முதலான காலநிலை மூலக்கூறுகளில் பருவகால வேறுபாட்டின் முனைப்பான தன்மையினை அவதானிக்க முடிகின்றது" ஆராய்க.

(13 புள்ளிகள்)

(Cont.../Page2)

23 AUG 2013

## பகுதி – II

4) 1931ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை அரசாங்கம் மேற்கொண்ட நில அபிவிருத்தி, நிலச்சீர்திருத்த நடவடிக்கைகளால் நாட்டில் எந்தளவுக்கு உண உற்பத்தியும்,நிலம்சார்ந்த பிரச்சினைகளும் தீர்க்கப்பட்டுள்ளன என ஆராய்க.

(25புள்ளிகள்

5)அ) இலங்கையில் வறுமையின் இடம் சார்ந்த வேறுபாடுகளையும் அவற்றி வேறுபட்ட பரிணாமங்களையும் விளக்குக

(12 புள்ளிகள்

ஆ) "வறுமையினைக் குறைப்பதற்காக இலங்கை அரசாங்கம் சுதந்திர பெற்ற காலத்திலிருந்து இன்றுவரை மேற்கொண்டுவரும் முயற்சிக குறிப்பிடத்தக்க தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது". இக் கூற்றினை பொருத்தமான உதாரணங்களுடன் ஆராய்க.

(13புள்ளிகள்

6)அ)"இலங்கையின் பொதுத்துறைக் கைத்தொழில்கள் நாட்டின் பொருளாதா அபிவிருத்திக்கு வழங்கிய பங்களிப்பு மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட ஒன்றாகும் இக் கூற்றினைச் சுருக்கமாக ஆராய்க.

(10 புள்ளிகள்

ஆ)"1970 களின் பிற்பகுதியிலிருந்து கைத்தொழிற்துறை தொடர்பா அரசாங்கத்தினால் பின்பற்றப்பட்டு வரும் தாராள பொருளாதாரக் கொள்கை தனியார் கைத்தொழிற்துறை வளர்ச்சியினைப் பலப்படுத்தியுள்ளது" இ கூற்றினை உதாரணங்கள் தந்து ஆராய்க.

(15 புள்ளிகள்

***